# அறவழி
NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி.

அறம் 1 மாதமொருமுறை 1986 ஆனி பக்கம் 8 விலை 1-50 வழி 2


## பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு அரசியல் கைதிகள் அந்தஸ்து வழங்க வேண்டுகோள்!

''இலங்கை அரசின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, எவ்வித நீதி விசாரணையும் இன்றி, சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் சகல தமிழ் இளைஞர்களுக்கும் அரசியல் கைதிகள் அந்தஸ்து வழங்கப்படல் வேண்டும்'' என இலங்கை அரசினைக் கோரும் தீர்மானம் ஒன்றினை அறவழிப் போராட்டக்குழு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பிவைத்துள்ளது.

அத் தீர்மானத்தில் மேலும்; ''அன்பு, இரக்கம், அறவழியைப் போதித்த புத்த பெருமானின் வழி செல்வதாகக் கூறிக்கொள்ளும் அரசு கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் விடயத்திலும் இதே கொள்கைகளின் அடிப்படையில் அவர்களை நடாத்தி மனிதாபிமான நோக்கில், அவர்கள் மீதான குற்றங்களைக் காலம் தாழ்த்தாது, விசாரணை செய்து, நீதி தேவனின் முன் நிறுத்துவதும் மிகவும் அவசியமானதாகும்'' என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இத் தீர்மானத்தின் பிரதிகளை அறவழிப் போராட்டக்குழு சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கம், சர்வதேச தோழமை இணைக்க இயக்கம் மூலம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக்காலப் புள்ளிவிபரங்களின் பிரகாரம், கைது செய்யப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் தொகை மூவாயிரத்துக்கு மேலாகவுள்ளதாகும்.

### இதயம் வெடிக்கிறதே!

விமானக் குண்டுவீச்சு! ஷெல் தாக்குதல்! துப்பாக்கிச் சூடு! கோரக்கொலை! தமிழ் மக்களின் உயிர்கள், உடைமைகள் அழிப்பு.

தமிழ்ப் பிரதேசங்களில் அன்றாடம் இடம்பெறுகின்ற இவ்வாறான கொடிய, கோர சம்பவங்களால், தமிழ் மக்களது இதயங்கள் சுக்கு நூறாக வெடிக்கின்றனவே!

கண்கள் குளமாகுகின்றன. நெஞ்சம் பிளந்திடும் இச் சம்பவங்கள் காரணமாக அன்றாடம் அகதிகளாகும் மக்களின் தொகையும் பெருகிய வண்ணமேயுள்ளன.

அன்பு, இரக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை. அறவழியைப் போதித்த புத்த பகவானின் பெயரை நித்தம் நித்தம் பின்பற்றுவதாகக் கூறுகின்றவர்களின் ஆட்சியிலா—தமிழ் மக்களின் இக்கதி! இதயம் வெடிக்கிறதே!

**அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவீர்!**

# 'புதிய' படகு மக்கள்

இலங்கைத் தமிழ் மக்களுள் அரசியல் தஞ்சமும், பாதுகாப்பும் தேடி இந்திய மண்ணை நாடி, படகுகள் மூலம் செல்கின்ற தமிழ் மக்களுக்கு, இந்திய வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சூட்டிய பெயர் தான் ''புதிய படகு மக்கள்''

இந்த மண்ணில் இடம்பெறுகின்ற அராஜகங்கள், அனர்த்தங்கள் காரணமாக. தமது சொந்த இடங்களில் பாதுகாப்புடன் இருக்க முடியாத தமிழ் மக்கள் தமது குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் இந்தியா சென்று, அங்கு, தென்னிந்திய மாநில அரசினுல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அகதிகள் முகாமில் தமது வாழ்க்கைப் படகை ஓட்டி வருகின்றனர்.

இவ்வாறு, தற்போது இந்திய மண்ணில் அகதிகளாக இருக்கும் எம்மவர்களின் தொகை சுமார் 1, 35, 000 என அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இவ்வருடம் தைமாதத்தில் மட்டும், சுமார் 27, 000 இலங்கைத் தமிழர்கள், திருகோணமலைப் பகுதிகளில் இருந்து படகுகளில், தென் இந்தியா சென்றுள்ளனர் எனவும் அறிய முடிகின்றது.

1958-ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து ஆரம்பமான 'அகதி ஓட்டம்' இன்றுவரை ஒரு தொடர் சங்கிலிச் சம்பவமாக எம் இனத்தில் இருந்து வருகின்றது.

அக்காலப் பகுதிகளில், பாதுகாப்புத் தேடி தென் இந்தியா சென்றவர்கள் நிதி வசதி படைத்தவர்கள் தான். ஆனல், இன்று அந்த நிலை மாறிவிட்டது என்பதை நாம் உணரக் கூடியதாகவுள்ளது.

தென் இந்தியாவில் இருக்கும் எம்மவர்களின் பெயர்—''புதிய படகு மக்கள்''!

## குவத்தமாலாவில் சர்வதேச அமைதிப்படை

ஐக்கிய அமெரிக்காவின்–பிலடெல்பியா மாநிலத்தினைத் தலைமைப் பணியமாகக் கொண்டு இயங்குகின்ற சர்வதேச அமைதிப் படையைச் சேர்ந்த தொண்டர்கள், லத்தின் அமெரிக்காவில் நித்தம் பிரச்சினையாக இருக்கின்ற குவத்தமாலா எனும் நாட்டில் அறவழி ரீதியில் இயங்கி, அந்த நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

குவத்தமாலா அரசுக்கு ஐக்கியஅமெரிக்க அரசு ஆயுத, படை பலங்களை விநியோகித்து, அவ் அரசின் அடக்கு முறைக்கும், அராஜகத்துக்கும் உதவி புரிந்து வருகின்றது

அதேவேளை, அமெரிக்காவில் இருக்கின்ற அறவழி சமாதானத் தொண்டர்கள், குவத்தமாலாவில் இருக்கின்ற மக்களை அடக்குமுறை அரசின் கொடிய செயல்களில் இருந்து காப்பற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சர்வதேச அமைதிப் படையின் சார்பில், குவத்தமாலாவில் தொண்டர்களாகப் பணிபுரிய முன்வருகின்றவர்களுக்கு இவ் அமைதிப் படையினர், அறவழி ரீதியிலான பயிற்சியை இருவாரங்களுக்கு அளித்த பின்பே, குவத்தமாலா செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்திய–சீன–எல்லைப்புறப் பிரச்சனை காலத்திலும், இச்சர்வதேச அமைதிப் படையினர் குறிப்பிடத்தக்க அளவு பணியினைப் புரிந்தவர்கள் என்பது விசேடமாகக் கவனிக்கப்படத்தக்க தொன்ருகும்,

காந்தி மகான் காட்டிய அறவழி ரீதியிலேதான், இவர்களது பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

## சமாதான நோபல் பரிசுக்குப் பரிந்துரை

லத்தீன் அமெரிக்காவில் இருக்கும் எக்குவடர் தேசத்தில் அறவழி மூலம் மகத்தான சமாதானப் பணி புரிந்து வருகின்ற ஆண்டகை லியோனிடாஸ். ஈ புரொஆனே (Leonidas. E. Proano) என்பவரின் சமாதானப்பணியினை மெச்சி, அவருக்கு' 1986ம் ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசில் வழங்கப்பட வேண்டும் என சர்வதேச தோழமை இணங்க இயக்கம் (IFOR) நோர்வே நோபல் நிலையத்துக்குப் பரிந்துரை செய்துள்ளது.

## என் தேசம் விழித்தெழுக!

எங்கே மனம் அச்சமின்றி இருக்கிறதோ,
எங்கே தலை நிமிர்ந்து நிற்கிறதோ
எங்கே அறிவுக்குத் தடை அரண் இல்லையோ,
எங்கே குறுகிய வீட்டுச் சுவர்கள் உலகைத் தூளாக
உடைத்து விடவில்லையோ.
எங்கே மொழிகள் வாய்மையின் ஆழத்திலிருந்து
எழுகின்றனவோ
எங்கே விடாமுயற்சி பூரணத்துவத்தை நோக்கித்
தனது கரங்களை நீட்டுகிறதோ
எங்கே பகுத்தறிவு எனும் தெளிந்த நீரோடை
மாண்ட பழக்கங்கள் என்னும் பயங்கரப்
பாலைவனத்தில், வழிதவறிப் போகவில்லையோ
எங்கே நீ மனத்தை விரிந்த சிந்தனைக்கும், பணிக்கும்
முன்னேக்கி அழைத்துப் போகிருயோ,
அந்த சுதந்திர சொர்க்க பூமியில், எந்தையே!
என் தேசம் விழித்தெழுக!

## அறவழியை விட்டு...

எதைக் கண்டாலும் மூடத்தனமாக எதிர்ப்பது, சந்தர்ப்பத்துக்குத்தக கொள்கைகளைக் கைவிடுவது, வீம்புக்காக எடுத்த விஷயத்திற்கெல்லாம் ஏட்டிக்குப் போட்டியாகச் செய்வது, பலாத்காரத்தையே உபயோகிக்க வேண்டும் என்று பிடிவாதமாக நடந்து கொள்ளுவது, இவ்விதமான குணங்கள் இன்றைய சமுதாயத்தில் பெருகிவிட்டன. இந்த நிலையில் தனிமனிதர்களும், சமுதாயமும், நாடும் எவ்வாறு முன்னேற முடியும்?

# சைவமும் உடலுழைப்பும்

ம. மாணிக்கம் – மதுரை

இந்து சமயத்தின் முப்பெரும் கடவுளர்களான பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகியோரில் சிவனை வழிபடும் சமய நெறியே பொதுவாக இன்று ''சைவம்'' என்னும் பெயரில் அழைக்கப்படுகிறது. இது சைவத்தின் குறுகிய பொருளே ஆகும்,

''சிவம்'' என்னும் சொல் ''அன்பு'' எனப் பொருள்படும். சிவவழிபாடு என்பது அன்பு வழிபாடாகும். யாருடைய வாழ்க்கை அன்பு நெறிப்பட்டதோ யாருடைய இதயத்தில் உயிர்களின்பால் கருணை ஊற்றெடுக்கிறதோ அவர்களே உண்மையான சைவர்களாவர். அவர்கள் கடைப்பிடிக்கும் வாழ்க்கை நெறியே உண்மையான ''சைவம்'' ஆகும். இவ்வகையில் நோக்குமிடத்து உலக சமயங்களனைத்துமே சைவத்தின் பாற்பட்டனவே.

மகாவீரரில் தொடங்கி நபிகள் நாயகம் ஈறாக உள்ள அனைத்து சமயக்குரவர்களும் அன்பின் அடிப்படையிலேயே தங்கள் சமய தத்துவங்களை உருவாக்கியிருப்பது நன்கு புலனாகும். அன்பே வாழ்க்கையின் ஆதாரம். அன்பே வாழ்வின் உயிர் மூச்சு. அறநெறிகள் அனைத்திற்கும் அடிப்படையாயிருப்பது அன்பேயாகும். எனவேதான் காந்தியடிகள் அன்பை (அஹிம்சையை) தன் அடிப்படை வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டிருந்தார்.

''அன்பு'' என்பது ஒரு பண்பைக் குறிக்கும் சொல்மட்டுமே. அது செயலாகப் பரிணமிக்கும்போதுதான் ''சிவம்'' தோற்றத்துக்கு வருகிறது. இனி இந்த சிவம் நம் வாழ்வில் எப்படிச் செயல்பட்டு நாம் சைவர்களாக முடியுமென்பதை பார்ப்போம்.

நாம் காணும் இப்புறவுலகு முற்றிலும் உழைப்புமயமான ஒன்று. உழைப்பின் மூலமே இவ்வுலகம் உயிர்ப்படைகிறது. நாம் உண்ணும் உணவு, உடுத்தும் உடை, வசிக்கும் வீடு ஆகிய ஆதாரத் தேவைகள் அனைத்துமே உழைப்பினால்தான் உருவாகின்றன. எனவே உழைத்து பொருள்களை உற்பத்தி செய்வோரே உயிர்களை ஓம்புவோராகின்றனர், உடலுழைப்பின் காரணமாக நாம் யாரைத் தாழ்ந்தவர்களாகவும் தீண்டத்தகாதவர்களாகவும் ஒதுக்கி வைத்து இழிவுபடுத்துகிறோமோ அவர்கள்தான் உண்மையான சைவர்களாவர். ஏனெனில் அவர்கள்தான் பசிப்பிணியால் மனிதகுலம் அழியாதபடி தங்கள் உழைப்பால் உணவை உற்பத்தி செய்து உயிர்க்குலத்தை காத்துவருகின்றனர். உடலுழைப்பை புறக்கணிப்போர் தங்கள் வாழ்க்கைத் தேவைகளுக்காக பிற உயிர்களை, தங்கள் சகோதர மனிதர்களை வதைப்போராகின்றனர்; வருத்துவோராகின்றனர். இதனைத்தான் அரசியல் வழக்கிலே ''சுரண்டல்'' என அழைக்கின்றனர். எனவே நாம் சைவ வாழ்க்கை வாழ விரும்பினால் அறவழிப்பட்ட சமய வாழ்க்கை வாழ விரும்பினால், உடலுழைப்பை நாம் ஒரு வழிபாடாக ஏற்றுக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

டால்ஸ்டாய், மகாத்மா காந்தி ஆகிய இருபெரும் மகான்களும் உடலுழைப்பை மனித வாழ்க்கைக்கு

( 4ம் பக்கம் பார்க்க )

# மாட்டின் லூதர் கிங்

மாட்டின் லூதர் கிங் தான் கொண்ட விசுவாசத்திற்கு ஒரு சான்றாக விளங்கி உயிர் நீத்தார். இறைவன்மீது அவர் கொண்ட விசுவாசம் மட்டும் அன்றி மனித இனத்தின்மீதும், ஏழை எளிய நீக்கிரோக்கள்மீதும், எல்லாவற்றிற்கும் மேலாக இளைஞர் மீதும் தாம் கொண்ட விசுவாசத்திற்காக உயிரிழந்தார்.

1968, ஏப்பிரல் 4ம் நாள் மாபெரும் தலைவனும், சமூக சீர் திருத்தவாதியுமான கிங் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார். ஓர் கொலைஞனின் துப்பாக்கிக் குண்டுகள் அவரின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியிட்டது. ஆனால், சில மக்கள் குழுக்கள் மீது அவர்களின் நிறம் இனம், பண்பாடு என்பனவற்றைக் காரணம் காட்டி அவர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டதையும், சமத்துவம் மறுக்கப்பட்டதனையும், ஒடுக்கு முறை கையாளப்பட்டதனையும் கிங் அவர்கள் வழங்கிய செய்திகள் எடுத்துரைத்து எம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

அநீதிக்கும், பாகுபாட்டிற்கும் மத்தியில் பிறந்து, வளர்ந்த கிங் அவர்கள் தமது நீக்ரோ மக்களுக்கு விடிவையும் கௌரவத்தையும் பெற்றுத்தர வேண்டியும், வசதிபடைத்த வகுப்பினரின் ஒடுக்குமுறையில் இருந்து அவர்களை மீட்டிடவும் கடினமாக உழைத்தார். ''நாம் ஏழைகளானாலும், கறுப்பர்களானாலும், நாங்களும் மனிதர்கள்'' என்று அவர் தம் மக்களுக்குக் கூறுவதுண்டு.

வரலாற்றினை நோக்கினால் உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்கள் இனம், மதம், நிறம் என்ற வேறுபாட்டின் ஒரே காரணத்தால் இன்னல்களுக்குள்ளாகி வந்துள்ளதையும், உள்ளாகிவருவதையும் நாம் அறியலாம். ஆனால் அவர்களிடம் பொதிந்துள்ள மானுட உணர்வுகளை என்றென்றும் நசுக்கவோ அடக்கியொடுக்கவோ முடியாது. அந்த உணர்வுகள் உதித்தெழுந்தன. ஒருவர்மீது மற்றவர் வெறுப்புக் காட்டுவதும், சந்தேகங்கொள்வதும் போன்ற, நம்மைச் சுற்றியுள்ள ஆபத்துக்களை நீக்க அவ்வுணர்வுகள் தமது ஒளியைப் பாய்ச்சுகின்றன.

இந்த நிச்சயமற்ற காலகட்டத்தில் யுத்த அபாயம், பொருளாதார நெருக்கடி, இனங்களுக்கிடையிலான அநீதிகள் என்பன மனித இனம் உயிர் வாழ்வதையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. இன்றைய கால கட்டத்தில் வாழும் மனிதர்களுக்கு மாட்டின் லூதர் கிங் அவர்கள்வழங்கும் செய்தியொன்று உண்டு. தன் சொல்லாலும் செயலாலும் கிங் அவர்கள் அச்செய்தியை வழங்குகின்றார். அவரின் உரைகளைக் கேட்டவர்களும், நூல்களைப் படித்தவர்களும் மனிதனை மனிதன் மதித்துக் கௌரவிக்கவேண்டியதின் அவசியத்தையும் மனிதரிடையே அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டியதின் தேவையையும் கற்றுக் கொண்டார்கள். இந்தக் கறுப்புமுகம் கொண்ட இரட்சகன், மீட்பவன் எல்லா மக்களுக்கும் உரியவன். கிங் அவர்களின் சிந்தனையைத் தூண்டும் வார்த்தைகள் அலபாமா மாநிலத்தில் இருந்து எட்டுத் திக்கிலும் எதிரொலித்தது. ''கறுப்பர்களுக்கு அவர்ஓர் ஆதாரம். வெள்ளையர்களுக்கு அவர் ஓர் சவால். அவர் ஓர் பிரமாண்டமான நீதி முரசு. ஓர் சமாதானச் சங்கொலி, நேர்மையின் முழக்கம்'' என்று கிங் அவர்களுக்குத் தன்னை அர்ப்பணித்த அவர் மனைவி கொரீற்றா கிங் அவரை வருணித்தார். (தொடரும்)

# அண்ணல் காந்தியின் அமுதமொழிகள்

- தர்மத்தைப் போல் அஹிம்சையும் நம் வீட்டிலிருந்தே ஆரம்பமாகவேண்டும்.
- மனிதவர்க்கம் கையாளக்கூடிய மாபெரும் சக்தி அஹிம்சை.
- இலட்சியங்கள் நடைமுறையில் காரிய சாத்தியமானவையாக இருக்கவேண்டும். இல்லையேல், அவை ஆற்றல் அற்றுப் போம்.
- உண்மைதான் நிலைத்து நிற்கும்! மற்றெல்லாம் கால வெள்ளத்தில் அழிந்து விடும்.
- நல்ல காரியத்தில் ஈடுபட்டிருக்கும்போது ஆட்களைப்பற்றிய விவாதம் வேண்டாம்.
- சகிப்பின்மை, மரியாதையின்மை, முரட்டுத்தனம் ஆகியவை நல்ல சமூகத்தில் நிராகரிக்கப்படவேண்டும்.
- சமுதாயம் முழுவதின் நன்மைக்காக உள்ள கட்டுப்பாடுகளுக்கு ஒருவன் விரும்பிக் கீழ்ப்படியவேண்டும். அது அவனையும் அவன் உறுப்பினனாக இருக்கும் சமுதாயத்தையும் வளம்படுத்தும்.
- நியாயம் விரும்புகிறவர்கள் பிறருக்கு நியாயம் வழங்கவேண்டும்
- நாம் முன்னேறவேண்டுமானால் பழமையை நினைத்துக்கொண்டிராமல் புதுமையைக் கையாளவேண்டும்.
- தோல்வி எனக்கு மனச்சோர்வு தராது! மாறாக அதுஎன்னை மேலும் ஊக்குவிக்கும்.

---

**சைவமும் உடலுழைப்……**

( 3ம் பக்கத் தொடர்ச்சி )

இன்றியமையாத ஒரு அறநெறியாகக் குறிப்பிட்டிருப்பதுடன் தங்கள் வாழ்க்கையிலும் அதனைக் கடைப்பிடித்து வாழ்ந்திருக்கின்றனர். காந்தியடிகள் ஒவ்வொரு நாளும் தவறாமல் கடைப்பிடித்து வந்த தினசரி நியமங்கள் இரண்டாகும். ஒன்று காலையிலும் மாலையிலும் தவறாத இறைவழிபாடு (பிரார்த்தனை). மற்றொன்று—நாள்தோறும் தவறாத நூற்பு வேள்வி ஆம்—நூற்பின் மூலம்தான் அவர் தன் உடலுழைப்பு விரதத்தை நிறைவேற்றி வந்தார். 'தரித்திர நாராயணர்க'ளென அவர் கூறிவந்த ஏழை எளிய பாட்டாளி மக்களுடன் தன்னை இணைத்துக்கொண்டார். அதற்குமுன் வாழ்ந்த மாபெரும் சமயக்குரவர்களும், மகான்களும் துன்பப்படும் மக்களுக்காக உயரத்தில் நின்று கண்ணீர் உகுப்பதோடு நின்றுவிட காந்தியடிகளோ நூற்பின் மூலம்தான் உருவாக்கிய அந்த உடலுழைப்பு என்ற கயிற்றின் மூலம் கீழிறங்கி தன்னையும் அவர்களுள் ஒருவராக்கிக் கொண்டார். இதுவன்றோ சமதர்ம சமத்துவப்புரட்சி! இங்குதான் மிகவுயர்ந்த சமய நெறியும் மிக உயர்ந்த புரட்சி நெறியும் சங்கமமாகின்றன,

உடலுழைப்பே சைவ சமயத்தின் உயிர்நாடி.

# அன்பு நாகரிகம்

— கரவையூர் செல்வம்

உலகின் பெரிய நாகரிகங்கள்பற்றி வரலாறு விரிவாக எடுத்துச் சொல்கிறது. ஒவ்வொரு நாகரிகத்துக்கும் ஒவ்வொரு தனி இயல்புண்டு.

காலப்போக்கில் இந்த இருபதாம் நூற்றுண்டுகளினூடாக பல நாகரிகங்கள் மாறி, மாறிப் பிறந்துள்ளன; அழிந்துள்ளன.

மக்கள் ஓர் ஏக்கத்துடன், தவிப்புடன் வாழ்கிறார்கள். ஓய்வாக இளைப்பாற, நிதானமாகச் சிந்திக்க. ஆறுதலாகச் செயற்பட எமக்கு நேரமில்லை. எதிலும் ஓர் அவசரம். எதிலும் ஒரு தவிப்பு. எதிலும் ஒரு ஏக்கம். இதனால் நோய்வாய்ப்படுவோரும் உண்டு; இறப்போரும் உண்டு.

இயந்திரப்புரட்சி மனித வாழ்க்கையைப் பெரிதும் பாதித்துவிட்டது. மனிதன் தனது வேலையைச் சுலபமாக்க, உற்பத்தியைப் பன்மடங்குகளாகப் பெருக்க, இயந்திரங்களைக் கண்டுபிடித்தான். ஆனால், இயந்திரங்கள் ஒன்று சேர்ந்து மனிதனையே இயந்திரமாக்கி விட்டன.

இயந்திரமான இந்த மனிதன், வேலையை வேலைக்காகவே செய்யப் பழகிவிட்டான். அதனால் மனித தொடர்புகள், மனித உறவுகள், மனித உணர்வுகள், மனித ஆசைகள் போன்ற அடிப்படையான மனித குணங்களை அடக்கி அழித்துவிடுகின்றன.

இதனால் அவன் மனிதரை மனிதராக மதியாமல், மனிதரையும் பொருட்களாகவே கணித்துவிடுகின்றான். சொந்தம் - பந்தம்— உறவு என்ற உணர்வுகள் கூட படிப்படியாக அழிகின்றன.

இந்த நாகரிகத்தில் ஒவ்வொருவனும் தன்னலத்திற்காக மற்றவர்களைப் பயன்படுத்துகின்றான். அவனது தேவை பூர்த்தியானதும் பொருளொன்றை எறிந்து விடுவது போல் மனிதரையும் எறிந்துவிடுகிறார்கள்.

பொதுமக்களுக்குப் புத்திமதி சொல்லி வழி நடத்துவோரும் இந்த இயந்திர யுகத்தில் சிக்கி அவர்களும் இயந்திரமாகவே மாறிவிடுகிறார்கள்.

(7ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுக்குள்ள புனித பணி!

— காந்தி

ஆயுத வழியை இந்தியா பின்பற்றினுல் அதற்கு இப்பொழுதைக்கு வெற்றி ஏற்படலாம். ஆனுல் நான் அப்பொழுது இந்தியாவைப் பற்றிப் பெருமைப்படுவதற்கு ஒன்றும் இராது. இந்தியாவுடன் நான் பிணைப்புண்டிருப்பதற்குக் காரணம் என்னிடம் உள்ளவை அனைத்தையும் நான் அதனிடமிருந்து பெற்றிருப்பதே. அது உலகிற்கு ஆற்றவேண்டி புனிதப் பணியொன்று உளதென்று முற்றிலும் நம்புகிறவன் நான்

இந்தியா ஐரோப்பாவைக் கண்மூடித்தனமாய்ப் பின் பற்றுதல் கூடாது. இந்திய இம்சைக் கொள்கையை ஏற்கும் சமயம் எனக்குப் பெரிய சோதனையாய் அமையும். அப்பொழுது நான் என் கடமையில் தவறமாட்டேனென்று நம்புகிறேன். என் மதம் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு உட்பட்டதல்ல. எனக்கு அதில் உண்மை நம்பிக்கை இருக்குமானுல் அது என் இந்தியப்பற்றையும் மீறிக்கிளம்பும் அஹிம்சா தர்மத்தின் மூலம் இந்தியாவுக்குப் பணிபுரிவதற்கே என் வாழ்க்கை அர்ப்பணமாகியுள்ளது.

இந்தியாவின் கடைத்தேற்றம் ரத்தம் சிந்தாத, எளிய தெய்வீக அமைதி வழியே அன்றி அது ஏற்கனவே அலுத்துப் போய் விட்ட மேலைநாடுகளின் ரத்தக்களரி வழியல்ல. இந்தியா தன் ஆன்மாவைப் பறிகொடுத்துவிடுமோவென்று அஞ்சவேண்டியிருக்கிறது. ஆன்மாவை இழந்த பிறகும் அது இருந்து வருதல் என்பது நடவாது.

ஆகையால் மேல்நாட்டுக் காற்றிற்கு தன்னுல் தப்பமுடியவில்லையென்று சோம்பேறித்தனமாகவும், கையாலாகாதது போலும் அது சொல்லக்கூடாது. அது தன் நலனையும், கருதி அதை எதிர்ப்பதற்கு வேண்டிய தென்புடன் எழுந்து நிற்கவேண்டும்.

நாம் பெற்றுப் பயன்பெறக்கூடிய அம்சங்கள் எவ்வளவோ மேல்நாடுகளில் இருப்பதை ஒத்துக்கொள்வதற்கு வேண்டிய பணிவு எனக்குண்டு. அறிவு என்பது ஒரு நாடு அல்லது மக்கள் இனத்திற்கே ஏகபோகமாய் அமைந்ததல்ல,

மேல்நாட்டு நாகரிகத்தை நான் எதிர்த்து வருவது, உண்மையில் ஆசியாக்காரர்கள் மேல் நாட்டிலிருந்து வருபவை அனைத்தையும் பார்த்து நடக்கவே பிறந்தவர்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவதையே ஆகும். சிரமங்கள் பலவற்றிற்குள்ளாவதற்கும், தன் நாகரிகம் அநீதியான முறையில் ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுப்பதற்கும் வேண்டிய பொறுமை மட்டும் இருக்குமானுல், அதன் நாகரிகத்தில் குறைகள் எவ்வளவோ இருப்பினும் இதுவரை அது கால வெள்ளத்தைச் சமாளித்து வந்திருப்பதைப் போல இனியும் சமாளித்து உலக அமைதிக்கும், தன் உருவான முன்னேற்றத்திற்கும், அதனுல் நீடித்த உதவி அளிக்கமுடியுமென்பது என் திடமான நம்பிக்கை.

உலகநாடுகளெல்லாம் பேராவலுடன் விரும்பும் உலக அமைதிக்கு இந்தியாவினுல், இது மட்டும் தன் லட்சியத்தை, சத்தியத்தையும், அஹிம்சையையும் கொண்டு எய்திவிடுமானுல், எவ்வளவோ உதவமுடியும். அப்பொழுது அந்நாடுகள் இதற்கு இதுவரை தாராளமாய் அளித்து வந்துள்ள உதவிகளுக்கு இது சிறிது பிரதி செய்வதாகவும் ஆகுமென்று நான் பணிவுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

---

## இலைக்கஞ்சி

அறவழிப் போராட்டக்குழுவினுல் நடாத்தப்பட்டுவருகின்ற பாலர் கழகங்களில் வாரத்தில் ஒரு நாள், சிறுர்களுக்கு இலைக்கஞ்சி உணவு வழங்கப்பட்டுவருகின்றது.

எம்பகுதிகளில் இருக்கின்ற போசாக்கு நிரம்பிய கீரை வகைகளைப் பாவித்தே இவ் இலைக்கஞ்சி உணவு வழங்கப்படுகின்றது.

இலைக்கஞ்சியில் இருக்கின்ற ஊட்டச் சத்துகள் எம் சிறுர்களின் உடல் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாகும் என்பது கண்கூடு.

# நாட்டின் விடுதலைக்குப் பயன்படுவார்கள் உயிரைக் கொடுப்பவர்கள்

காந்தியடிகள் தென்னுபிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்ப ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அப்போது போனிக்ஸ் ஆசிரமத்திலிருந்து ஒரு சகோதரர் காந்தியடிகளைக் கேட்டார். ''நம் நாடு சென்று அங்கு எங்கே இருப்பீர்கள்-நமக்குப் பொருத்தமான இடம் கிடைக்குமா?''

காந்தியடிகள்: ''எங்கு பொருத்தமான நல்ல இடம் கிடைக்குமோ அங்குதான் இருப்போம். அவ்வாறு ஒன்றும் கிடைக்கவில்லையென்றால் ராஜ்கோட்டில் என் தாத்தாவின் குடிசை இருக்கவே இருக்கிறது. அங்கேயே சென்று, கூடாரம் போட்டுக்கொள்வோம்''.

வேறொருவர்: ''நாம் அங்கு சென்றால் முற்றிலும் முன்பின் அடையாளம் தெரியாதவர்களாய் இருப்போம். அந்நிலையில் நாட்டுத் தொண்டிற்கான என்ன வேலையைச் செய்வோம்? கலை விரைவில் புரிந்துகொள்ள முடியும்! அவற்றில் பங்குகொள்ளவும் முயல்வோம்.''

நான்காமவர் ஆவேசத்துடன் இடையிலியே எழுந்து பேசினர். ''ஆனல் பாபுஜி, நாட்டில் மக்கள் தங்களிடம் இருந்து இவைகளை எதிர்பார்த்து உட்கார்ந்து கொண்டு இருக்கமாட்டார்கள். அங்கே சர் பெரோஜ் ஷாமேதா, சுரேந்திரநாத் பானர்ஜி போன்ற சட்ட மன்றங்களை எதிர் ஒலிக்கச் செய்பவர்களும், கவர்ணர், வைசிராய் முதலியோரை ஆட்டி வைப்பவர்களுமான வீரத்தலைவர்கள் இருக்கின்றார்கள். தாங்கள் அஹிம்சைப் போராட்டம் ஒன்றில் வெற்றி பெற்று நாடு செல்வீர்கள். தமது அடிமைத் தளையை அகற்ற பிறநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்தும் போரிட அவர்கள் தங்களிடம் இருந்து வீரர்களைக் கேட்பார்கள். அப்போது அவர்களுக்கு முன்னால் தாங்கள் என்ன செய்வீர்கள்?'' தூக்குமேடையேறவும் அவர்களுக்கு தயக்கமுண்டாகாது. இந்தியாவின் விடுதலைக்கு

## உத்தமர் காந்தி வாழ்கையில் உணர்வூட்டும் நிகழ்ச்சி

காந்தியடிகள்: ''எங்கு இருப்போமோ அங்கேயே கொஞ்சம் நிலத்தை எடுத்துக் கொள்வோம். அதில் வேளாண்மை செய்வோம். நூற்பு—நெசவு வேலைகளை மேற்கொள்வோம். சுற்றுப்புறத்தைத் துப்பரவு செய்து இறை வழிபாடு செய்வோம். இவ்வாறு அந்தச் சூழ்நிலையைத் துப்பரவாகவும், தூய்மையாகவும் வைத்திருப்போம்''

இன்னொருவர்: ஆனல் நாட்டிலோ மக்கள் நம்மீது பெரும் நம்பிக்கை வைத்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கு நடைபெற்ற சத்தியாக்கிரகப்போரில் வெற்றி பெற்ற தாங்கள் அங்கு திரும்புவீர்கள். எனவே, அவர்களுடைய இந்த நம்பிக்கைகள் வீணனவை அல்லவா? நேற்றுத் தாங்கள் கூறினீர்கள் தலைப்பாகை, முழங்காலுக்குக் கீழ் தொங்கும் பெரிய சட்டை, வேஷ்டி முதலிய உடுப்பதாக. நம் நாட்டுக் கிராமத்து உடையை உடுக்கவும் விரும்புவீர்கள். நம்முடைய இந்த கிராமத்துப் பாணியை பார்த்து அவர்கள் நம்பிக்கை இழப்பார்கள்.''

காந்தியடிகள்: ''ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும். எங்களைத் தொப்பி முதலியவற்றுடன் ஆங்கிலேயரைப் போலல்லாது, தம்மைப் போலவே காணும்போது 'அவர்களுக்கு எங்கள்மீது நம்பிக்கை உண்டாகும். எங்களுடைய இந்த உடையால் படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்குமிடையேயுள்ள வேறுபாடு மறையும். நாம் அவர்களுடைய சுகதுக்கங்

ராஜா, மகாராஜாக்கள், ராவ் பகதூர், கான் பகதூர், ''ஷர்'' றைட், வக்கீல், பாரிஸ்டர்கள் உதவமாட்டார்கள். **நாட்டின் விடுதலைக்குப் பயன்படுபவர்கள் தியாகிகள், வீர - வீராங்கனைகள், வாழ்நாள் முழுவதையும் நாட்டுத் தொண்டு என்னும் தீயில் வாட்டிய வீரர்கள்,** தவசிகள் அஞ்சா நெஞ்சர்கள். எதிரியின் குண்டைத் திறந்த மார்பில் தாங்குபவர்கள் தூக்குமேடையில் ஆசனத்தில் ஓடிச்சென்று ஏறவல்ல! வீர சத்தியாக்கிரகிகள். என்னிடத்தில் இந்த முதலீட்டை நாட்டின் திருவடிகளில் வைப்பேன். அத்துடன் இதைப்போன்ற முதலீடு இன்னும் எவ்வளவு இருக்கிறது என்பதையும் பார்ப்பேன்?'' என்று கூறினர்.

## சர்வதேச மன்னிப்புச்சபையின் செய்திக் கடிதம்

சர்வதேச மன்னிப்புச் சபையினல் ( Amnesty International ) வெளியிடப்படுகின்ற மாதாந்த செய்திக்கடிதத்தினைப் பெற விரும்புவோர். தபால் செலவாகப் பிரதி ஒன்றுக்கு ஐம்பது சதம் பெறுமதியான முத்திரையை ''அறவழி'' அஞ்சல் பெட்டி எண்: 2, சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். (ஆ-ர்)

## சுவிஸில் இருக்கும் தமிழ் இளைஞர்கள் திருப்பி அனுப்பப்படுவார்களா?

இலங்கையில் அரசியல் நிலைமைகள் தொடர்ந்தும் சீரற்ற நிலையில் இருந்து வருகின்ற போதிலும் கூட, சுவிர்ச்சர்லாந்து அரசு, அரசியல் தஞ்சம் கோரி அங் கிருக்கும் தமிழ் இளைஞர்கள் விடயத்தில் மிகவும் கடின மான போக்கையே கடைப்பிடித்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.

சுவிஸ் அரசின் கடினபோக்கின் காரணமாக, இலங்கைத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கை யின்மையும்-விரத்தி நிலையும் உருவாகி வருகின்றது. அந்த நாட்டு அரசு—அங்கிருக்கும் ஏனைய நாட்டு அகதிகள் விடயத்தில் காட்டுகின்ற பரிவு, அனுதாபம், புரிந்துணர்வைக் கூட, தமிழ் இளைஞர்கள் விடயத்தில் காட்டுவதில் தொடர்ந்தும் தயக்கம் காட்டி வருவது காணக்கூடியதாகவுள்ளதாக சுவிஸில் அகதிகள் பணி யில் ஈடுபட்டு வருகின்ற பொது அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

சுவிஸில் இருக்கின்ற மக்கள் தொடர்பு சாதனங் கள்—இலங்கையில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் பற் றிய நல்ல தகவல்களை மக்களுக்கு வழங்காமையும், இவ்வாறான நிலைமைக்குக் காரணமாகும் என இவ் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

அங்கு வசிக்கும் மக்களில் ஜேர்மன் மொழி பேசும் மக்களே பெரும்பான்மையாக இருப்பவர்களா வார்கள் என்றும், தமிழ் இளைஞர்களின் அரசியல் புகலிடம் விடயத்தில், இம்மக்களே கூடுதலான கடின போக்குடையவர்களாகக் கருதப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, கடைசியாகக் கிடைக்கப் பெற்ற செய்திகளின் பிரகாரம் 29 தமிழ் இளைஞர்கள் அடுத்தமாதம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படு வார்கள் எனத் தெரிகின்றது.

இந்த 29 இளைஞர்களுக்கும் கொழும்பு செல்வதற் கான விமானப் பயணச் சீட்டுகளும் பொலிஸாரால் வழங்கப்பட்டுவிட்டது.

இதேவேளை, இத்தமிழ் இளைஞர்கள் இலங்கைக் குத் திருப்பி அனுப்பக்கூடாது என, அங்கிருக்கும் பொது அமைப்புகள் குரல் கொடுத்து வருகின்றன.

சுவிஸில் இருக்கின்ற மக்களின் ஆதரவும், உதவி யும் இல்லையெனில் இவ்விடயம் மென்மேலும் சிக்க லாகும் எனலாம்

## ''மக்கள் தற்குறிகளாகவே இருக்கட்டும்'' — காந்தி

மதுப்பழக்கம், ஒருவனுடைய மனிதத் தன்மை யை அழித்து அவனை மிருகமாகவே மாற்றி மனைவி, தாய் சகோதரி முதலியவர்களைக் கூடப் பிரித்துணர இயலாதபடி ஆக்குகின்றது.

மது, மலேரியா போன்ற விஷ சுரங்களிலும் கொடியது. ஏனெனில் மலேரியா ஒரு மனிதனின் சரீர சக்தியைத் தான் பாதிக்கும். ஆனால், மதுவோ அவனுடைய சரீரத்தையும் குறைத்து அவனது மனி தத் தன்மையையும் இழக்க வைக்கின்றது.

மதுபானப் பழக்கமுடையவர்களை மணந்த பெண் களைக் கேளுங்கள் மதுவின் கொடுமை தெரியவரும்.

ஆயிரம் குடிகாரர்கள் நம்மிடையே இருப்பதை விட நம்நாடு வறுமைநாடாகவே இருப்பதை நான் விரும்புகின்றேன். மதுவிலக்கினால் கல்வி வளர்ச்சிக்கு கிடைக்கும் வருமானம் தடைபெறுகிறதென்றால். நம் நாட்டு மக்கள் ''தற்குறிகளாகவே இருக்கட்டும்'' என்று கூறுவேன்.

களவையும், ஒழுக்கமற்ற செயல்களையும் புரிகின் றதைக்காட்டிலும் மிகப்பெரிய பாதகமானது வேறெதுவுமில்லை. இவ்விரு மாபாதகத்திற்கும் கள் சாப்பிடுவதே தந்தை.

## விபத்துகளும் முதலுதவியும்

இன்றைய வாழ்வில் அடிக்கடி துப்பாக்கிச் சூடு கள் விமான ஹெலிகொப்டர், ஷெல் தாக்குதல்களால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவற்றினால். காயங்களும் அதிர்ச்சியும், ஆபத்தும் ஏற்படுகிறது. காயங்கள் மிகச்சிறியவையாகவும், சாதாரணமான வையாகவும் இருக்கலாம். சிலநேரங்களில் அவை பலத்தவையாகவும் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியவையாகவும் இருக்கக் கூடும்.

விபத்து ஏற்பட்டதும் செய்வது அறியாது திகைத்து நிற்கலாகாது. முறைதெரியாமல் சிகிச்சை அளிக்க முற்பட்டால் அது ஆபத்தில் முடியக்கூடும்.

எனவே மக்கள் முதலுதவி பற்றி நன்கு தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

முதலுதவிச் சிகிச்சைப் பயிற்சி வகுப்புகளை தத் தம் கிராமங்களில் ஏற்பாடு செய்ய விரும்புவோர் எம்முடன் அல்லது, யாழ் மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஆணையாளர். திரு. சீ. எஸ். சுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்வது விரும்பத் தக்கது

### அன்பு நாகரிகம்......

(4 ம் பக்கத் தொடர்...)

அறிவுத்துறையிலும் புதிய புதிய வடி வங்கள் தோன்றுகின்றன. பழைய உண்மை கள் தோன்றுகின்றன. பழைய உண்மைகள் புதிய சொற்களில் புதிய கோலங்கள் பெறு கின்றன. இக்கோலங்களைக் கண்டு மயங்கி அக்கோலங்களில் தம்மை ஈடுபடுத்துவோர் பலர். ஆனால் பெற்ற அறிவுக்கேற்ப, பரி மாறிய, கருத்துக்கேற்ப வாழ முற்படார்; வாழ முற்படுவோரையும் தடுத்துவிடுவர்.

உளஇயல் அடிப்படையில் உண்மைகளை அறிந்தும் அவற்றுக்கேற்ப மனித உணர்வுகளை மதியார். அறிவுரை வழங்குவோர், சமூகத் தொண்டர்கள், சமுதாயத்திற்காக வாழ்வைத் துறந்தோர்— இவர்களை கூட அமைப்புகளாக —நிறுவனங்களாக மாறிவிட்டார்கள். அங்கு மனித உணர்வுகளுக்கு இடமில்லை. மனித உறவுகளுக்கு இடமில்லை.

அப்பொழுதுதான் மனிதன் மனிதனாக, மனிதனுடன் தனக்காகவும், அயலவருக்காக வும் வாழமுடியும் — வாழவேண்டும்.

# அறவழி
NONVIOLENCE

## போதைவஸ்தே — சென்றுவிடு !

போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி, தன்னை தன் குடும்பத்தை அழிவுப் பாதையில் இட்டுச்சென்ற-செல்கின்ற பல்லாயிரக் கணக்கானவர்களின் சோகம் ததும்பும் கதைகளையும், சம்பவங்களையும் வெளி நாடுகளில் அடிக்கடி அறிய முடியும்.

பேராபத்தை விளைவிக்கின்ற போதைவஸ்துவின் பாவனைக்கு எம் மக்கள் அடிமையாகாமல் நாம் ஒவ்வொருவரும் விளிப்புடன் பார்த்துக்கொள்ளவேண்டிய நேரம் இதுவாகும்.

இக் கொடிய சமூக ஆநீதியினை நாம் ஒன்று சேர்ந்து எதிர்க்கவேண்டும். எனவே, இத்தீய செயலில் மக்களை மிக விசேடமாக, இளைஞர்-யுவதிகளை ஈடுபடாமல் இருக்க ''அறவழி'' வேண்டுகின்றது.

பேராபத்தை விளைவிக்கக்கூடிய போதைவஸ்தினை, எம் பிரதேசங்களில் இருந்து உடனடியாகவே அப்புறப்படுத்தி எம் மக்களை அழிவில் இருந்து பாது காக்கவேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனதும் கடமையாகும்.

## அனுதாபம்

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ் அகதிகளின் துயர் துடைப்பதில் அரும்பெரும் பணியாற்றிய அமரர் திரு. கா. விசுவலிங்கத்தின் திடீர் மரணம் குறித்து அறவழிப் போராட்டக் குழு அனுதாபம் தெரிவிக்கின்றது.

தமிழினம் பல வேதனைகளுக்கு உள்ளடக்கப் பட்டிருக்கும், இன்றைய நெருக்கடிமிக்க காலகட்டத்தில் விசுவலிங்நம் ஐயாவின் இழப்பு ஈடுசெய்ய முடியாத தொன்ருகும்.

அமரரின் தன்னலமற்ற சேவைக்கு தமிழினம் என்றென்றும் கடப்பாடுடையதாக விருக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

## சமுதாய மாற்ற சிந்தனைக்கு வழிகாட்டும் பத்திரிகை


''தமிழ் மக்களின் சமுதாய மாற்ற சிந்தனைக்கும் வாழ்க்கைக்கும் பயன்தரவல்ல நல்ல பல அம்சங்களைத் தாங்கி வெளிவந்துள்ள 'அறவழி' தமிழ் மக்கள் மத்தியில் ஆரோக்கியமான பணியினை ஆற்றும் என நம்பலாம்''

இவ்வாறு மே மாதம் 31ம் திகதி அறவழியில் போராட்டக் குழுவின் பணிமனையில், குழுவின் செயலர். திரு.க. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெற்ற 'அறவழி' பத்திரிகை வெளியீட்டு விழாவின்போது, வெளியீட்டுரை நிகழ்த்திய பணடிதர் செ. சிவலிங்கம் கூறினர்.

பத்திரிகையின் முதல் பிரதியை சம்பிரதாய பூர்வமாக பண்டிதர் செ. சிவலிங்கம் வெளியிட கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் திரு என். கந்தையா பெற்றுக்கொண்டார்.

விழாவின்போது ஆசியுரைகள் வழங்கிய, திருவாளர்கள். ஏ. கே. இராமலிங்கம், அதிபர். திரு. க. இளையதம்பி, ஆசிரியர் ச. நடேசபிள்ளை ஆகியோர் 'அறவழி' பத்திரிகையின் தரம், அம்சங்கள் பற்றி எடுத்துரைத்து பத்திரிகையினை வாழ்த்தினர்கள்.

மிக எளிமையான முறையில் ஏற்பாடுசெய்யப் பட்டிருந்த இவ் வெளியீட்டு விழாவின்போது பல பெரியோர்களும் குழு ஆதரவாளர்களும் பங்கு கொண்டு சிறப்புப் பிரதிகளைப் பெற்று, 'அறவழி' பத்திரிகைக்கும், அதனை வெளியீடு செய்கின்ற ஸ்தாபனத்தினையும் ஊக்கமளித்து உற்சாகமூட்டினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



'அறவழி' வெளியீட்டு விழாவின் போது, முதல் பிரதியை பண்டிதர் செ. சிவலிங்கம் வெளிபிட, அதிபர் திரு. நா. கந்தையா பெறுவதை இப்படத்தில் காணலாம்.

(படம் — டீ. எம். இராசலிங்கம்)

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினல் யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1986 ஆனி 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.